பேரூராட்சிகள் இயக்குநர், குறளகம், சென்னை–108 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: டாக்டர்.இரா. செல்வராஜ், இ.ஆ.ப.,

ந.க.எண்.6793/2009/அ7

நாள். 12.07.2013

பொருள்:- பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – தமிழ்நாடு பேரூராட்சி சார்நிலை பணி விதிகளின் கீழ் வரப்பெறும் அனைத்து நிலை செயல் அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணி விதிகளின் கீழ் வரப்பெரும் தலைமைஎழுத்தர்/உதவியாளர் பணியிடஙகள்– மாநில அளவில் அலகு நிர்ணயம் செய்தது –1990ம் ஆண்டு முதல் 1.1.2012 வரை திருத்திய தற்காலிக முன்னுரிமைப் பட்டியல் வெளியிடப்பட்டது – பணியாளரிடமிருந்து ஆட்சேபனை மற்றும் மேல்முறையீடு வரப்பட்டது – பரிசீலிக்கப்பட்டு திருத்திய இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல்– ஆணையிடப்படுகிறது.

பார்வை:-

1. அரசாணை எண்.(ப) 270, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 04.04.1990.
2. அரசாணை எண்.(ப) 271, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 04.04.1990.
3. அரசாணை எண். 62, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் வழஙகல்(பேரூ1)துறை, நாள் 18.04.2009.
4. பேரூராட்சிகள் இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்.6793/ 2009/அ1, நாள்.31.12.2009.
5. அரசாணை எண்.42, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் வழஙகல் (பேரூ1) துறை, நாள் 18.04.2012
6. அரசாணை எண்.107, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் வழஙகல் (பேரூ1) துறை, நாள்.21.11.2012.
7. பேரூராட்சிகள் இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்.6793/ 2009/அ7, நாள் 29.3.2013.
8. பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள்
9. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.6793/2009/அ7, நாள் 30.4.2013 மற்றும் 05.06.2013.
10. குழுவின் அறிக்கை நாள்.30.06.2013.

•••••

**ஆணை:–**

பார்வை–1 மற்றும் 2–ல் காணும் அரசாணைகளில் தமிழ்நாடு பேரூராட்சிகள் சார்நிலை பணிகளான அனைத்து நிலை பேரூராட்சிகள் செயல் அலுவலர்களுக்கான சிறப்பு பணி விதிகள் மற்றும் அமைச்சுப்பணி இடஙகளுக்கு பணிவிதிகள் முறையே வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாய 25.04.1994–ம் தேதிய

தீர்ப்பின் அடிப்படையில் சார்நிலை பணிகளின் வரப்பெறும் அனைத்து நிலை செயல்அலுவலர்கள் பணியிடஙகளுக்கு மாநில அலகு நிர்ணயம் செய்திட பணி விதிகள் திருத்தம் அரசாணை எண். 62, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் வழஙகல் (பேரூ1) துறை, நாள் 18.04.2009ல், அரசால் வெளியிடப்பட்டது.

2) அதனடிப்படையில் இவ்வியக்ககத்தால் 31.12.2009–ல் 1990 முதல் 2009 வரையிலான ஆண்டுகளுக்கு அனைத்து செயல்அலுவலர்கள் நிலையில் திருத்திய தற்காலிக முன்னுரிமைப்பட்டியல் வெளியிடப்பட்டது. அப்பட்டியலின் மீது பணியாளர்கள் முதல்நிலை செயல்அலுவலர் பதவி உயர்வுக்கு கீழ்நிலைப்பணியிடமான இரண்டாம்நிலை செயல்அலுவலர் மற்றும் தலைமைஎழுத்தர்/உதவியாளர் நிலையில் 1:1 என்ற விகிதாசாரம் நீக்கம் செய்திட பல்வேறு ஆட்சேபனைகள் வரப்பெற்றதைத் தொடர்ந்து அவ்விகிதாத்சாரத்தை நீக்கம் செய்திடவும் மற்றும் இரண்டாம்நிலை செயல்அலுவலர் பணியிடத்திற்கு நிகர் பணியிடமான அமைச்சுப்பணியின் கீழ் வரப்பெறும் தலைமைஎழுத்தர்/உதவியாளர் பதவியினை மாநில அலகுகில் நிர்ணயம் செய்தல் தொடர்பாக கூடுதல் விதித்திருத்தம் கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு அதனடிப்படையயில் பார்வை.5 மற்றும் 6–ல் காணும் அரசாணைகளின்படி கூடுதல் விதித்திருத்தஙகள் அரசால் வெளியிடப்பட்டது. இவ்வரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட விதித்திருத்தஙகளின் அடிப்படையில் மாநில அளவில் அனைத்து நிலை பேரூராட்சிகள் செயல் அலுவலர் நிலைகள் மற்றும் தலைமை எழுத்தர்/உதவியாளர் நிலைகளில் 04.04.1990–லிருந்து 01.01.2012 வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் தனித்தனியே தற்காலிக பணி மூப்பு பட்டியல் பார்வை–7–ல் காணும் செயல்முறைகளின்படி வெளியிடப்பட்டு பணியாளர்களின் ஆட்சேபணைகளை 30 நாட்களுக்குள் சமர்ப்பித்திட கேட்டுக் கொள்ளப்பட்டது.

3) அதன்படி வரப்பெற்ற மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் பரிசீலனை செய்திட பார்வை–9–ல் காணும் செயல்முறைகளின்படி குழு அமைக்கப்பட்டு ஆட்சேபனை மற்றும் மேல்முறையீடுகளை மேற்கண்ட குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஆட்சேபனை மற்றும் மேல்முறையீடுகளின் அடிப்படையில் திருத்திய தற்காலிக முன்னுரிமைப்பட்டியலில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி செய்யப்பட்டு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

**4) மேற்காண் இறுதி செய்யப்பட்ட முன்னுரிமைப் பட்டியல் பேரூராட்சிகள் துறை இணையதள முகவரியான "www.tn.gov.in/dtp' - ல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விவரத்தை அனைத்து மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள் சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

5) இந்த முன்னுரிமைப் பட்டியலை தற்போது பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அனைத்து நிலை பணியாளர்களுக்கும் தனித்தனியே சார்வு செய்து உரிய ஒப்புதலுடன் இவ்வியக்ககத்திற்கு 10 தினஙகளுக்குள் அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்பணிமூப்பு பட்டியலின் மீது மேல்முறையீடு செய்ய விரும்புவோர் இச்செயல்முறை ஆணை கிடைக்கப் பெற்ற 60 தினஙகளுக்குள் அரசுக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

ஒம்/– இரா.செல்வராஜ்,
இயக்குநர்.

இணைப்பு:

அனைத்து நிலைசெயல்அலுவலர் மற்றும் உதவியாளர்/
தலைமை எழுத்தருக்கான இறுதி செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியல்.

பெறுநர்
பட்டியலில் கண்ட அலுவலர்கள்,
(சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மூலமாக),

நகல்

1. அரசு செயலர், நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமை செயலகம், சென்னை–9.
2. அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
3. ஆணையர், நகராட்சி நிர்வாகம், சேப்பாக்கம், சென்னை–5.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15
5. அனைத்து மண்டல உதவி இயக்குநர்கள்.
6. அ7 மற்றும் இ4 இருப்பு கோப்பு
7. அறிவிப்பு பலகை

/உத்திரவுப்படி/

இயக்குநருக்காக 12.7.2013

12.7.13